சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 08.09.2023 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கேசவன் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.9**

---

முதல் விசாரணை

நான் குள்ளப்பகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**

கடந்த 25.03.2018ம் தேதி பிற்பகல் 2.00 மணிக்கு நானும் எங்கள் ஊர் வைரமணி மகன் ராஜேஷ்கண்ணன் என்பவரும் எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் பஸ் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த கூடலூர் காவல் ஆய்வாளர் மற்றும் போலிசார் அங்கு வந்து பஸ் ஏறுவதற்காக நின்று கொண்டிருநத P.V.K. தெருவைச் சேர்ந்த சாமி என்பவர் மனைவி சுகந்தி என்பவர் தனது கணவர் சாமியை எங்கள் ஊர் பங்களாமேட்டுத் தெருவைச் சேர்ந்த போலிஸ் சுதாகர் என்பவருடன் கூட்டுச்சேர்ந்து அதிக பவர் உள்ள மாத்திரையைக் கொடுத்து கொலை செய்ய முயற்சி செய்ததாக கூறி எங்கள் இருவர் முன்னிலையில் மேற்படி சுகந்தியை பெண்போலிசார் மூலம் பிடித்து விசாரிக்க சுகந்தி தானாக முன்வந்து தன் கணவரை தனது கள்ளக்காதலன் போலிஸ் சுதாகருடன் கூட்டுச்சேர்ந்து தன் கணவர் தினமும் சாப்பிடும் மாத்திரையை அவர் சாப்பிட்ட பின்னர் அவருக்கு தெரியாமல் தினம் பாலில் அதிக பவர் உள்ள 4 மாத்திரைகளை போட்டுக்கொடுத்து கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், ஆனால் தனது கணவர் அதில் சாவதாக தெரியவில்லை என்றும், அதனால் கள்ளக்காதலன் போலிஸ் சுதாகரின் ஏற்பாட்டில் கம்பத்தைச் சேர்ந்த கூலிப்படையைச் சேர்ந்த ஒருவருடன் போனில் பேசி தனது கணவரை கொலை செய்ய முயற்சித்ததாகவும், தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு தான் தன் கணவரை கொலை செய்ய பயன்படுத்திய அதிக பவர் உள்ள

மாத்திரைகளை கணவருக்கு பாலில் கலந்து கொடுத்தது போக மீதியை தான் தனது வீட்டில் மறைத்து வைத்துள்ளதாகவும். அதை தன்னுடன் வந்தால் தான் எடுத்துத் தருவதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தை என்னையும் ராஜேஷ்கண்ணனையும் சாட்சியாக வைத்து பதிவு செய்தார்கள். அதில் நானும் ராஜேஷ்கண்ணனும் சாட்சியாக கையொப்பம் போட்டோம். ஒப்புதல் வாக்கு மூலத்தின்படி போலிஸ் ஆய்வாளர் ராஜேஷ்கண்ணனும் நானும் சுகந்தியின் வீட்டிற்கு வந்து பார்த்தபோது அவர் தனது வீடடில் தனது கணவர் சாமிக்கு பாலில் கலந்து கொடுத்துவிட்டு மீதம் வைத்திருந்த அதிக பவர் உள்ள மாத்திரைகள் 8 மாத்திரைகளை மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து கொடுத்தார். அந்த அதிக பவர் உள்ள மாத்திரைகளை 3.15 மணிக்கு ஒரு அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அவ்வாறு கைப்பற்றிய அத்தாட்சியில் நானும் ராஜேஷ்கண்ணனும் கையொப்பம் போட்டுள்ளோம். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. நானும் ராஜேஷ்கண்ணன் என்பவரும் அத்தாட்சியில் சான்று பொருட்களை கைப்பற்றும்போது உடன் இருந்து கையொப்பம் போட்டுவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து பிறழ் சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court rend over to the witnessess in the presence of the accused and admitted by him to be correct.

Asst. Sessions Judge,
Uthamapalayam.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 08.09.2023 SC.113/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.10**

---

முதல் விசாரணை

நான் கம்பம் தாத்தப்பன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்பதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.12. அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.13 ஆகும்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**

கடந்த 26.03.2018ம் தேதி அதிகாலை 6.00 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக நானும் எங்கள் தெருவைச் சேர்ந்த தெய்வம் என்பவர் மகன் அரசன் என்பவரும் கம்பம் புது பஸ் ஸ்டாண்டு மதுரை செல்லும் பஸ் நிற்கும் ரேக்கின் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த கூடலூர் காவல்துறை ஆய்வாளர் போலிஸ் பார்ட்டியுடன் அங்கு வந்து அங்கு நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம் தெரிந்து கொண்ட குள்ளப்பகவுண்டன்பட்டியைச் சேர்ந்த போலிஸ் சுதாகர் என்பவரை பிடித்து விசாரித்தார்கள். அதைக்கண்ட நானும் என்னுடன் நின்ற அரசனும் என்னவென்று பார்ப்பதற்காக அருகில் சென்று பார்த்தபோது மேற்படி போலிஸ் சுதாகர் என்பவர் தனது பெயர் விலாசம் கூறி கம்பம் கிராமச்சாவடி தெருவில் பாரத் கேஸ் கம்பெனிக்கு எதிரில் மாடியில் சாமி ஸ்டோர்ஸ் உரிமையாளரான குள்ளப்பகவுண்டன்பட்டியைச் சேர்ந்த சாமி என்பவரது மனைவி சுகந்தி என்பவருக்கும் தனக்கும் பனியன் லோயர் தைக்க சென்றபோது பழக்கம் ஏற்பட்டு அது கள்ளக்காதலாக மாறியது என்றும், நானும் சுகந்தியும் அடிக்கடி

சுகந்தியின் கம்பெனி செல்போனில் பேசியதாகவும், அதற்கு சுகந்தியின் கம்பெனியில் வேலை செய்யும் பாண்டியராஜன் என்பவர் உதவியாக இருந்ததாகவும், சுகந்தியின் கணவர் சாமிக்கு 12 வருடங்களுக்கு முன்பு இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டதாகவும், கடந்த 12 வருடங்களாக சுகந்தி இல்லற சுகம் இல்லாமல் இருந்து வந்ததாக கூறியதாகவும் தானும் சுகந்தியும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசமாக இருப்பதாகவும் சுகந்தியின் மீது சந்தேகப்பட்டு சுகந்தியின் கணவர் சாமி சுகந்தியுடன் சண்டையிட்டதாகவும், அதை அறிந்த போலிஸ் சுகாதர் இனியும் சுகந்தியின் கணவர் சாமியை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது, எப்படியாவது கொலை செய்ய வேண்டும். ஆனால் கொலை என்று யாரிடம் கண்டுபிடிக்கக்கூடாது என்று சுகந்தி மற்றும் பாண்டியராஜீடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு முடிவு செய்து சுகந்தியின் கணவர் சாமி தினமும் மாலை 6.00 மணிக்கு சாப்பிட்டு வரும் மாத்திரையான Acitrome (4 ml) என்ற மாத்திரையை 4 வீதம் அவருக்கு பாலில் கலந்து கொடுத்து வந்ததாகவும், சாமிக்கு மூக்கிலும் வாயிலும் ரத்தம் வந்து கோவை குப்புசாமி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 3 நாட்கள் கழித்து சாமியை சுகந்தி வீட்டுக்கு கூட்டி வந்ததாகவும், அதன்பின்னும் சுகந்தி தன் கணவருக்குதொடர்ந்து Acitrome (4 ml) என்ற மாத்திரையை 4 வீதம் தினமும் பாலில் கலந்து கொடுத்ததாகவும், அதன்பின் மீண்டும் சாமிக்கு வாயிலும் மூக்கிலும் ரத்தம் வந்ததாகவும் அவரை மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாகவும், ஆனால் சாமிக்கு அந்த மாத்திரைகள் செட் ஆகிவிட்டது. அவருடைய உயிருக்கு எதுவும் ஆகவில்லை என்று சுகந்தியும் சுதாகரும் முடிவு செய்து அவர்கள் கடந்த 03.03.2018ம் தேதி மாலை 6.00 மணிவாக்கில் போனில் பேசிக்கொண்டிருந்தபோது சுதாகருக்கு ஏற்கனவே பழக்கமான கம்பம் தக்கன் காலணியைச் சேர்ந்த ஜெயராமன் மகன் மணிவண்ணன் என்பவருக்கு கான்பரன்ஸ் கால் போட்டு சாமியை கொலை செய்ய வேண்டுமென்று சேர்ந்து பேசி அதற்கு அட்வான்சாக ரூ.10,000-த்தை சுகந்தியிடமிருந்து பாண்டியராஜன் மூலம் கொடுத்தனுப்பச் சொன்னதாகவும், சாமியை கம்பெனியை விட்டு வரும்போது தீர்த்துக்கட்ட முடிவு செய்ததாகவும் தான் மருத்துவ விடுப்பில் சொந்த ஊருக்கு வந்திருந்த வேலையில், சாமி எல்லா விசயங்களையும் தெரிந்து கொண்டு 25.03.2018ம் தேதி புகார் கொடுத்து அதன்பேரில் வழக்கு பதிவு செய்து போலிசார் கைது செய்துவிட்ட விபரம் தெரிய வந்ததாகவும், தான் 26.03.2018ம் தேதி அதிகாலை 6.00 மணிக்கு யாருக்கும் தெரியாமல் எங்காவது தப்பிச்சென்றுவிடலாம் என்று நினைத்து

கம்பம் புது பஸ் ஸ்டான்டில் மதுரை பேருந்து செல்லும் ரேக்கில் நின்றிருந்த தன்னை கூடலூர் போலிஸ் இன்ஸ்பெக்டர் தன்னை கைது செய்ததாக கூறி தான் சுகந்தியிடம் அடிக்கடி பேசி கள்ளக்காதல் வளர்க்க பயன்படுத்திய என்னுடைய Vivo போனை உங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் நீங்கள் என்னையும் என்னுடன் நின்றுகொண்டிருந்த அரசனையும் சாட்சியாக வைத்து அதில் நானும் 1வது சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும், அதேபோல் அத்தாட்சியிலும் நான் 1வது சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து பிறழ் சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இல்லை).